செ.வெ.எண்:31 நாள்: 21.07.2020

கரூர் மாவட்டம்

**கரூர் மாவட்ட மக்களுக்கு வழங்குவதற்காக ரூ.7.75 லட்சம் மதிப்பிலான 1000 கிலோ கபசுரக்குடிநீர் சூரணப்பொடிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்களிடம் சிவா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தினர் வழங்கினர்**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்ட மக்களுக்கு வழங்குவதற்காக ரூ.7.75லட்சம் மதிப்பிலான 1000 கிலோ அளவிலான கபசுரக்குடிநீர் சூரணப்பொடிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்களிடம், சிவா டெக்ஸ்டைல்ஸ் ஜவுளிக்கடை நிறுவனத்தின் சார்பாக அதன் பங்குதாரர் திரு.சு.சரவணன் இன்று (21.07.2020) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் வழங்கினார்.

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கரூர் மாவட்டத்தில் போர்க்கால அடிப்படையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாக பொதுமக்களுக்கு உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வல்லமை கொண்ட, நம் முன்னோர்களால் வழிவழியாக கடைபிடிக்கப்பட்ட சித்தமருத்துவ முறைப்படி, 15 வகையான மூலிகைகளின் கலவையாக உருவாக்கப்பட்ட கபசுரக் குடிநீர் பொதுமக்களுக்கு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து வழங்கப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் மக்களுக்கு வீடு வீடாகச் சென்று கபசுரக்குடிநீர் வழங்கும் பணி மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயாபஸ்கர் அவர்களால் 11.07.2020 அன்று துவக்கிவைக்கப்பட்டு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது. வீடு வீடாக கபசுரக்குடிநீர் வழங்கும் பணியில் களப்பணியாளர்களும், தன்னார்வலர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கென்று தமிழ்நாடு மருத்துவ தாவர பண்ணைகள் மற்றும் மூலிகை மருத்துவக் கழகத்தில் இருந்து மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் இதுவரை ரூ.42,62,500 பணம் செலுத்தி 5,500 கிலோ அளவிலான கபசுரக்குடிநீர் தயாரிக்கும் சூரணப்பொடிகள் தமிழ்நாடு மருத்துவ தாவர பண்ணைகள் மற்றும் மூலிகை மருத்துவக் கழகத்தில் இருந்து வாங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சிவா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் சார்பாக பொதுமக்களின் நலன் கருதி 1000 கிலோ எடையுள்ள ரூ.7.75 லட்சம் மதிப்பிலான கபசுரணப்பொடிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் அந்நிறுவனத்தின் பங்குதாரர் திரு.சு.சரவணனன் வழங்கினர். கபசூரணப்பொடிகளைப் பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், தற்போது நிலவிவரும் இக்கட்டான சூழலில் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு தாமாக முன்வந்து உதவியதற்காக தனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்வதாக தெரிவித்தார்.

மேலும், கரூர் மாவட்டத்தில் உள்ள தனியார் ஜவுளிக்கடைகள் மற்றும் ஆயத்த ஆடை நிறுவனத்தினர் தங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு கபசுரக்குடிநீர், சளி-இருமலை கட்டுப்படுத்தும் ஆடாதொடை மனப்பாகு, தாளிசாதி சூரனம் ஆகிய மருந்துகளை தமிழ்நாடு மருத்துவ தாவர பண்ணைகள் மற்றும் மூலிகை மருத்துவக் கழகத்தில் இருந்து வாங்கி வழங்க வேண்டும் என்றும், அதன்கான தொகையினை செலுத்திவிடுவதாகவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர். இதனையடுத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தமிழ்நாடு மருத்துவ தாவர பண்ணைகள் மற்றும் மூலிகை மருத்துவக் கழகத்தில் இருந்து கபசூரணப்பொடிகள் மற்றும் இதர மருந்துகள் மாவட்ட ஆட்சியர் அலுவலத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அதனடிப்படையில், அட்லஸ், ஏசியன் பேப்ரிக்ஸ் மற்றும் ஏ டெகஸ்ட் ஹோம் ஆகிய நிறுவனங்கள் ரூ.13,60,057 மதிப்பில் கபசூரணப்பொடிகள், ஆடாதொடை மனப்பாகு மருந்து, தாளிசாதி சூரனம் மாத்திரை ஆகியவற்றை தங்கள் நிறுவனங்களிள் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கவதற்காக தமிழ்நாடு மருத்துவ தாவர பண்ணைகள் மற்றும் மூலிகை மருத்துவக் கழகத்திற்கு பணம் செலுத்தி மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பெற்றுகொண்டனர்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.ந.ரசிகலா, ஊராட்சிகளுக்கான உதவி இயக்குநர் திரு.உமாசங்கர் உள்ளிட் அலுவலர்கள் உடனிருந்தனர்

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**